திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், கொத்தமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்.

முன்னிலை: திருமதி.மேனகா கோபாலகிருஷ்ணன்.

ந.க.எண்.001/2024 நாள்: 04.03.2024

பொருள்: மனைப்பிரிவு ஒப்புதல்–திருத்துறைப்பூண்டி வட்டாரம்–கொத்தமங்கலம் ஊராட்சி–மற்றும் கிராம நில அளவை எண்.67/1, 67/3B1 மற்றும் 68/1A2–ல் 13172.00 ச.மீ.பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவாரூர் அவர்கள் ஒப்புதல் அளித்த வரைபடத்தில் 1 முதல் 59 மனைகளுக்கு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை:

1) திரு.ராமச்சந்திரன் த/பெ. கலியபெருமாள், 1/205, மெயின்ரோடு, ஐவநல்லூர், நாகப்பட்டினம் தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம் கடிதம் நாள் 19.02.2024.

2) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருத்துறைப்பூண்டி அவர்களின் ந.க.எண்.0637/2024/ஆ3 நாள் 28.02.2024.

3) இணைஇயக்குநர் /உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் கடிதம் ந.க.எண்.19849/2023/TVR நாள் 24.01.2024.

4) தானப்பத்திர ஆவண எண்.88/2024, நாள் 09.01.2024.

5) அரசாணை (நிலை) எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3)த் துறை நாள் 04.05.2017.

6) இணை இயக்குநர்/உ தவி இயக்குநர் (கூ.பொ.) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் கடிதம் ந.க.எண்.127/2022/TVR நாள் 08.03.2022.

7) மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் ஒப்புதல் இணையதள விண்ணப்ப எண்.LHE6XOKF (19849/2023)TVR நாள் 10/01/2024.

8) மற்றும் இதர தொடர்புடைய ஆவணங்கள்.

****

உத்தரவு:

திருத்துறைப்பூண்டி வட்டாரம், கொத்தமங்கலம் ஊராட்சி மற்றும் கிராம நில அளவை எண்.67/1, 67/3B1 மற்றும் 68/1A2–ல் 13172.00 பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவு நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் திருவாரூர் அவர்களின் செயல் ஆணையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் 1 முதல் 59 வரையுள்ள மனைகளுக்கு உரிய கட்டணம் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

1) கூராய்வு கட்டணமாக ஒரு மனைக்கு ரூ.1000/–(ரூபாய் ஆயிரம் மட்டும்)வீதம் 59 மனைகளுக்கும் ரூ.59,000/–(ரூபாய் ஐம்பத்தொன்பதாயிரம் மட்டும்) கொத்தமங்கலம் ஊராட்சி மனை பிரிவுகளுக்கான ராயநல்லூர் கிளை பாரத ஸ்டேட் வங்கி கணக்கு எண்.42745563339–ல் 29.02.2024ல் செலுத்தப் பட்டுள்ளது.

Scanned by CamScanner

2) வழிகாட்டு மதிப்பு சந்தை மதிப்பில் 3சதவீதம் வீதம் கட்டணம் ரூ.25,500/– (ரூபாய் இருபத்தைந்தாயிரத்து ஐநூறு மட்டும்) ஆன்லைன் (இ.செல்லான்) மூலம் உரிய வங்கி கணக்கில் 01.03.2024 ல் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 1 முதல் 59 மனைகளுக்கு உரிய கட்டணம் செலுத்தியுள்ளதாலும், சாலைகள், பூங்காக்கள், தெருவிளக்கு அமைப்பதற்கு உரிய இடம் ஊராட்சிக்கு தானப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாலும், மேற்கண்ட மனைகளை ஊராட்சிமன்ற தீர்மான எண்.26ல் ஒப்புதல் வழங்கியுள்ளதாலும் (தீர்மான எண்.26, நாள் 04.03.2024) இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

(பார்வை 7–ல் குறிப்பிட்டுள்ள மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவாரூர் அவர்களின் செயலாணையின் நிபந்தனைகளும் இதற்கு பொருந்தும்)

தலைவர்,
ஊராட்சிமன்றம்,
கொத்தமங்கலம்

தலைவர்,
ஊராட்சி மன்றம்,
கொத்தமங்கலம்.

பெறுதல்:
திரு.ராமச்சந்திரன்,
1/105– மெயின்ரோடு,
ஐவநல்லூர்,
நாகப்பட்டினம் தாலுக்கா,
நாகப்பட்டினம் மாவட்டம்–611 106.

Scanned by CamScanner